# <u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>

## <u>OS – 15/2015</u>

நாள் 18.11.2025

DW1 – வெங்கடாசலம்

த/பெ – லேட். கருப்பண்ண கவுண்டர்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th day of November 2025)**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.7 செட்டில்மெண்ட் ஆவணம் 03.07.2012–ம் தேதியில் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கை வாதி தாக்கல் செய்த தேதியான 18.11.2009–ம் தேதிக்கு பின்னிட்டு தான் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்ட சொத்து பிதுரார்ஜித வகையில் பாத்தியப்பட்ட சொத்து என்று தான் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பி.வா.சா.ஆ.7 செட்டில்மெண்ட் ஆவணம் எழுதப்பட்ட போது நான் உடன் செல்லவில்லை, அது பற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.7 ஆவணம் ஏற்பட்டுள்ள விபரம் 2010–ம் ஆண்டில் தான் எனக்கு தெரிய வந்தது. நான் சொல்லும் 30.09.2004–ம் தேதியில் ஏற்பட்டதாக சொல்லும் உயில்சாசனத்தை எழுதி வைத்தவரின் இறப்பு சான்றிதழை சார்பதிவாளரிடம் சமர்பிக்கும் பட்சத்தில் தான் உயில் சாசனத்தை பெற முடியும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆனால், நான் எனது அப்பா கருப்பண்ண கவுண்டரின் இறப்பு சான்றிதழ் இன்றைய தேதி வரையில் இந்த வழக்கில் சமர்பிக்கவில்லை என்றால் சரிதான். அவ்வாறு எனது அப்பாவின் இறப்பு சான்றிதழ் சமர்பிக்காத நிலையில் அவர் எழுதி வைத்ததாக சொல்லப்படும் உயில் சாசனம் அமுலுக்கு வரவில்லை என்று

சொன்னால் சரியல்ல. எனது அப்பா கருப்பண்ண கவுண்டர் கடந்த 17.07.2009–ம் தேதியில் இறந்த போது அவரது பெயரில் சொத்து எதுவும் இல்லை, ரூ.15,000/– ரொக்க பணம் மட்டும் தான் வைத்திருந்தார். எனது அப்பாஅவருடைய வரவு செலவு குறித்த கணக்கை எழுதி வைத்திருந்தார் என்றால் சரிதான். அவ்வாறு எனது அப்பா அவருடைய வரவு செலவு கணக்கை எழுதி வைத்திருந்தார் என்ற விபரத்தை எனது எதிர்வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. வாதி எத்தனை அயிட்ட சொத்துக்களுக்கு வழக்கு போட்டுள்ளார் என்றால் 3 அயிட்ட சொத்துக்களுக்கு பாகம் கேட்டு வழக்கு போட்டுள்ளார். தாவா 1–ம் அயிட்ட சொத்தில் 13.04 ஏக்கர் பரப்பு கொண்டது. தாவா 2–ம் அயிட்ட சொத்தானது நத்தம் வீடு என்றால் சரிதான். அந்த வீட்டில் தான் நான் பிறந்தது முதல் நானும், எனது சகோதரனும், எனது சகோதரியும் குடியிருந்து வந்தோம் என்றால் சரிதான். எங்களுக்கு முன்பாக எனது பெற்றோர்கள் அந்த வீட்டில் தான் குடியிருந்து வந்தார்கள் என்றால் சரிதான். எனது பெற்றோர்களுக்கு முன்பாக எனது தாத்தா முத்துச்சாமி மற்றும் எனது பாட்டி சின்னக்காள் ஆகியோர் அந்த வீட்டில் வசித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. எனது தாத்தாவும், பாட்டியும் அந்த வீட்டில் குடியிருந்து வரவில்லை என்று எதனடிப்படையில் சொல்கிறேன் என்றால் எனது அம்மாவும், அப்பாவும் மற்றும் உறவினர்கள் சொல்லி தான் எனக்கு தெரியும். நான் 1961–ம் ஆண்டில் தான் பிறந்தேன். தாவா 2–ம் அயிட்ட வீட்டில் எனது தாத்தாவும் பாட்டியும் தான் வசித்து வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. தாவா 2ம் அயிட்ட சொத்தை பொறுத்து எனது அப்பா எழுதி வைத்ததாக சொல்லும் பி.வா.சா.ஆ.10–ல் எனக்கு அனுபோகப்படி பாத்தியப்பட்ட சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது

என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.10 செட்டில்மெண்ட ஆவணம் எழுதப்பட்ட போது அதில் வீடு இருந்தது. அந்த வீடு எனது தாத்தா முத்துச்சாமிகவுண்டரால் 1933–ம் ஆண்டு கட்டப்பட்டது என்றால் சரியல்ல. அதனால், தாவா 2ம் அயிட்ட சொத்தும் பூர்வீக சொத்து என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.10 செட்டில்மெண்ட ஆவணம் 30.04.2009–ம் தேதியில் எழுதப்பட்ட போது அந்த சொத்தில் வாதிக்கும் இந்து வாரிசுரிமை சட்டம் 2005–ன்படி உரிமை உண்டு என்றால் சரியல்ல. தாவா 2ம் அயிட்ட சொத்து எங்களுடைய கூட்டுக் குடும்ப சொத்து என்றும், அதில் எனது அப்பா கருப்பணகவுண்டர் குடும்பத்தின் கர்த்தா என்ற முறையில் அவர் பெயரில் பட்டா பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

3. தாவா 2ம் அயிட்ட சொத்தானது ஊர் நத்தம் காலியிடமாக அனுபவித்து வந்த நிலையில் எனது அப்பா பெயரில் பட்டா வழங்கப்பட்டது. மேற்படி விபரம் எனது அப்பா சொல்லித்தான் தெரியும். அந்தசமயம் நான் பிறக்கவே இல்லை. பி.வா.சா.ஆ.10–ல் எனது சகோதரர் செல்வமுத்து என்பவருக்கு ஏதேனும் சொத்து கொடுத்துள்ளதாக குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எனது அப்பா கருப்பணகவுண்டருக்கு இரண்டு ஆண் மக்கள் மற்றும் அவரது மனைவி இருந்து வரும் நிலையில் எனது பெயரில் மட்டும் பி.வா.சா.ஆ.10 ல் கண்ட சொத்தை தானமாக எழுதி வைக்க காரணம் ஏதேனும் உண்டா என்றால் நான் எனது அப்பாவை பராமரித்து வந்து அதனால் எனது பெயரில் எழுதி வைத்திருக்கலாம். பி.வா.சா.ஆ.10–ல் சாட்சியாக கையொப்பம் செய்துள்ள ராஜந்திரன் என்பவர் மனைவி தங்கையின் கணவர். பி.வா.சா.ஆ.10–ல் எவ்வளவு மதிப்பு போட்டு எழுதப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.10 செட்டில்மெண்ட ஆவணம் ஏற்பட்ட போது என்னிடம்

ஆதார் கார்டு மட்டும் தான் கேட்டார்கள் அதை நான் கொடுத்தேன். மற்றபடி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.10 செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தப்பட்ட போது எனது அப்பா கருப்பண்ண கவுண்டர் திருப்பூர் TMF மருத்துவமனையில் உடல்நிலை சரியில்லாமல் உள்நோயாளியாக படுத்திருந்தார் என்றால் சரியல்ல.

4. முத்திரைத்தாளை வாங்கும் போது அது சம்பந்தப்பட்ட பதிவேட்டில் கையொப்பத்தை பெற்றுக்கொண்டு தான் முத்திரைத்தாளை கொடுப்பார்கள் என்றால் சரிதான். எனது அப்பா கருப்பண்ண கவுண்டர் உடல்நிலை சரியில்லாமல் மருத்துவமனையில் படுத்திருந்ததால் நான் தான் சென்று முத்திரைத்தாளை நான் தான் வாங்கி வந்தேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.10–ன் அசல் தானசெட்டில்மெண்ட் பத்திரம் என் வசம் தான் இருந்து வந்தது என்றால் சரிதான். அதில் கண்ட முத்திரைத்தாள் யார் பெயரில் வாங்கப்பட்டுள்ளது என்றால் அதை நான் பார்க்கவில்லை. பி.வா.சா.ஆ.10–ல் கண்ட முத்திரைத்தாளை பத்திர விற்பளையாளர் ராமசாமியை விசாரித்தால் அவரிடம் யார் கையொப்பம் செய்து முத்திரைத்தாளை வாங்கினார்கள் என்ற விபரம் தெரிய வரும் என்றால் சரிதான். நான் சொல்வது போல எனது அப்பா எனது பெயருக்கு பி.வா.சா.ஆ.10 செட்டில்மெண்ட ஆவணத்தை எழுதி வைக்கவே இல்லை என்றும், நானே அதை மோசடியாக தயார் செய்து கொண்டேன் என்றும், அதனால் தான் எனது மனைவியின் தங்கையின் கணவரான ராஜேந்திரனை சாட்சியாக அழைத்துச்சென்று கையொப்பம் பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.10 ஆனது முத்திரைத்தாள் குறைவு கட்டணம் கட்டி தான் பதிவாகி உள்ளது என்றும், அதனால் தான் 30.04.2009–ம் தேதியில் பதிவு செய்யப்பட்ட ஆவணம் 15.06.2009–ம்

தேதியில் தான் ரூ.1,000/—ஐ கட்டி பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ரூ.1,000/—ஐ எனது தகப்பனார் கருப்பண்ண கவுண்டர் தான் கட்டி அசல் பத்திரத்தை எனக்கு வாங்கி கொடுத்தார். அப்போது அந்த ரூ.1,000/— கட்டியதற்காக வழங்கப்பட்ட ரசீது என் வசம் இல்லை. அந்த அசல் செட்டில்மெண்ட் ஆவணத்தை எனது அப்பா என்னிடம் வாங்கி கொடுத்ததாக நான் சொல்லியுள்ள நிலையில் அந்த ரசீதும் என் வசம் தான் இருக்கும் என்றால் சரியல்ல. அந்த ரசீதில் எனது அப்பா கையெழுத்து செய்தாரா? அல்லது கைரேகை வைத்தாரா? என்று எனக்கு தெரியாது. எனது அப்பா கருப்பண்ண கவுண்டர் வலது கையில் ஆங்கிலத்தில் கையொப்பம் செய்வார்.

5. எனது அப்பா கருப்பண கவுண்டருக்கு அவர் இறப்பதற்கு முன்பாக பக்கவாதம் ஏற்பட்டு அவருடைய இடது கை, வலது கால் செயலிழந்து செயல்பாடுகள் குறைவாக இருந்தது. அவ்வாறு பக்கவாதம் ஏற்பட்ட சமயத்தில் எனது அப்பாவை ஒரு நபரை பிடித்து கொண்டு தான் நடப்பார். எனது தகப்பனாருக்கு வலது காலும், இடது கையும் செயல்படாமல் இருந்த போது பி.வா.சா.ஆ.10 செட்டில்மெண்ட் ஆவணத்தை வாங்க சென்றதும் கிடையாது, அதற்காக ரூ.1,000/—ஐ அவர் கட்டி ரசீது பெற்றதும் கிடையாது என்றால் சரியல்ல. அவ்வாறு நான் சொல்வது போல எனது அப்பா பத்திரத்தை வாங்க சென்றிருந்தால் ஒரு நபரின் துணையுடன் தான் சென்றிருப்பார் என்றால் சரிதான். அப்போது எனது அப்பாவுடன் பாலதொழுவை சேர்ந்த பழனி என்பவரின் மகனான மணி என்பவருடன் தான் சென்றிருப்பார். அந்த மணி என்பவருக்கு அப்போது சுமார் 45 வயது இருந்திருக்கும். நான் சொல்லும் அந்த மணி என்பவர் என்னுடைய நண்பர் என்றால் சரிதான். அவருடைய அப்பா பழனி எனது அப்பாவிற்கு நண்பர்.

6. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.15 குடும்ப பாகசாசனமானது எனது அப்பா கருப்பண்ண கவுண்டரும், நானும், எனது பிள்ளைகள் மற்றும் எனது அண்ணன் செல்வமுத்து, அவரது மக்கள் ஆகியோர் சேர்ந்து ஏற்படுத்தி கொண்டுள்ளோம் என்றால் சரிதான். அந்த பாகசாசனத்தில் உள்ள விபரங்கள் அனைத்தும் உண்மையானது தான். அதில் கொடுத்துள்ள சொத்து விபரமும் சரியானது தான். அந்த பி.வா.சா.ஆ.15 பாகசாசனத்தில் நாம் அனைவரும் பாகம் ஆகாத இந்து கூட்டுக்குடும்ப பாகஸ்தர்கள் என்ற வாசகம் கண்டு தான் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.15 மூலம் எனக்கும் பங்கு உள்ளது என்றால் சரிதான். அதேபோல், எனது அண்ணன் செல்வமுத்துக்கும் பங்கு உள்ளது. எங்களுடைய பிள்ளைகளுக்கும் பங்கு உள்ளது. ஆனால், எனது அப்பா கருப்பணகவுண்டருக்கு பொதுக்குடும்ப நிதியிலிருந்து ரூ.1,00,000/- ரொக்க பணம் கொடுக்கப்பட்டதாக தான் A செட்டியூலாக ஒதுக்கி எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால், பி.வா.சா.ஆ.15 மூலம் எனது அப்பா அவர் பங்காக ரூ.1,00,000/-ஐ பெற்றுக்கொண்டு விட்ட நிலையில் சொத்துக்களில் அவருக்கு பங்கு இல்லை என்றால் சரிதான். பொதுக்குடும்ப நிதி என்றால் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட மொத்த பொதுவான தொகை என்றால் சரிதான். அதில் இதுவரை ஏகோபித்து பொதுவாக வைத்து அனுபவித்து வந்தோம், இனிமேல் அந்தப்படி பொதுவாக அனுபவித்து வர நமக்குள் சரிப்படவில்லை என்று கண்டு பாகசாசனத்தில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துக்களில் எனது உடன்பிறந்த சகோதரியான வாதிக்கும் சரிசம பாக பாத்திய உரிமை உள்ளது என்றும், அதை மறைத்து வாதிக்கு தெரியாமல் நாங்கள் மோசடியாக பி.வா.சா.ஆ.15 பாகசாசனத்தை ஏற்படுத்தி

கொண்டுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. அதேபோல், எனது பெயரில் மோடிசயாக பி.வா.சா.ஆ.10 செட்டில்மெண்ட் ஆவணத்தையும் உடல்நிலை சரியில்லாத எனது அப்பாவை பயன்படுத்தி எழுதி பெற்று கொண்டேன் என்றால் சரியல்ல.

7. பி.வா.சா.ஆ.1 உயில் சாசனத்தை எழுதி வைத்ததாக சொல்லப்படும் எனது அப்பா 17.07.2009–ம் தேதியில் அவருக்கு சொத்தே இல்லை என்று சொன்னால் சரிதான். ஏனென்றால் பி.வா.சா.ஆ.10, பி.வா.சா.ஆ.15 ஆவணங்களை எங்களுக்கு எழுதி கொடுத்து விட்டார். அதேபோல், 15.05.2009–ம் தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரம் பி.வா.சா.ஆ.9–ல் இந்த உயில் சாசனத்தை பற்றி குறிப்பிட்டு சொல்லியுள்ளார். பி.வா.சா.ஆ.5 கிரைய ஆவணம் ஏற்பட்ட போது எனது அப்பா கருப்பண கவுண்டருக்கு சுமார் 5 வயது என்று கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தாத்தா முத்துச்சாமி கவுண்டர் இறந்த போது எனது அப்பாவிற்கு சுமார் 16 வயது இருந்ததாக எனது அம்மா மற்றும் எனது அத்தை சொல்லி எனக்கு தெரியும். உயில் சாசனத்தில் கண்ட சொத்துக்கள் பிதுரார்ஜித வகையில் பாத்தியப்பட்ட சொத்து என்று சொல்லப்பட்டுள்ளதா? என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி உயில் சாசனத்தையும் எனது அப்பா உடல்நிலை சரியில்லாத நிலையில் எழுதி வைத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனது பாட்டி சின்னக்காள் வீட்டு வேலையை பார்த்து கொண்டு, விவசாய வேலையும் செய்து வந்தார் என்றால் சரிதான். அதனால் எனது தாத்தா முத்துச்சாமி கவுண்டர் தான் உழைத்து சம்பாதித்து வந்தார் என்றால் சரியல்ல. முத்துச்சாமி கவுண்டரின் பூர்வீகம் கவுந்தம்பாளையம். அவருக்கு அங்கு எவ்வளவு சொத்து இருந்தது என்றால், அங்கிருந்த சொத்தை கடனுக்காக விற்று விட்டு திம்மநாயக்கம்பாளையத்திற்கு வந்து விட்டார்.

அங்கிருந்து வந்த பிறகு தாவா 2–ம் அயிட்ட சொத்தில் உள்ள வீட்டில் வசித்து வந்து இறந்து போய்விட்டார்.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது)**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.11.18 18:56:35 -0200

**Subordinate Judge,**
**Avinashi.**